முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

61 T I

## முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020
## First Term Test - Grade 10 - 2020

பெயர் : ...................................... நேரம் : 03 மணி. 10 நிமி.

## புவியியல் - I

**கவனிக்க :**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- இவ்வினாப்பத்திரத்திற்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.

**1 - 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

(01) புவியின் மேற்பரப்பின் பரப்பளவு .................................. சதுர கிலோ மீற்றராகும்.
( 570 மில்லியன் / 510 மில்லியன் / 120 மில்லியன் )

(02) புவித்தொகுதியானது .................................... உப தொகுதிகளை உள்ளடக்கியுள்ளது.
( நான்கு / மூன்று / ஐந்து )

(03) வளிமண்டலத்தின் மிகத் தாழ்ந்த வெப்பநிலையைக் கொண்ட படை .......................... மண்டலமாகும்.
( மாறன் / படை / இடை )

(04) படிவு வீழ்ச்சி மூலம் புவிக்கு வந்தடைந்த நீரின் ஒரு பகுதி நிலத்தின் மேற்பரப்பில் பாய்வது ..................... எனப்படும். ( ஊடுவடிதல் / கழுவு நீரோட்டம் / ஆவியுயிர்ப்பு )

(05) புவியோட்டுக்கும் மையத்துக்கும் இடையில் அமைந்துள்ள படை ................................. ஆகும்.
( ஓடு / மையம் / மூடி )

(06) மடகாஸ்கர் தீவானது .................................... கண்ட மேடைக்குள் அமைந்துள்ளது.
( ஆபிரிக்கா / ஆசியா / அவுஸ்திரேலியா )

(07) புவி அமைப்பின் குறுக்கவெட்டு முகத்திற்கு அமைய கூற்றன்பேர்க் தொடர்ச்சியின்மையின் இரு பக்கமும் காணப்படுவது .................................. ஆகும்.
( மூடி மற்றும் மையம் / ஓடு மற்றும் மூடி / வெளி மையம் மற்றும் உள்மையம் )

(08) ஆழமான சமுத்திரத்தில் எரிமலைச் செயற்பாடுகளின் காரணமாக உருவான தீவுக்கு உதாரணமாக ................................... தீவைக் குறிப்பிடலாம்.
( ஹவாய் / ஜப்பான் / தஸ்மேனியா )

(09) இமாலய மலைத் தொகுதியில் அமைந்துள்ள ............................... மேட்டு நிலமானது கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரத்தில் அமைந்துள்ளது.
( தக்கண / திபெத் / மொங்கோலியா )

(10) உலகில் மிகவும் ஆழமான அகழி ................................. சமுத்திரத்தில் அமைந்துள்ளது.
( அத்திலாந்திக் / இந்து / பசுபிக் )

**11 - 15 வரையான கூற்றுக்கள் சரியாயின் “ச” ஐயும் பிழையாயின் “பி” ஐயும் சுற்றி வட்டமிடுக.**

(11) புவியின் மேற்பரப்பில் 71% சமுத்திரங்களினால் மூடப்பட்டுள்ளது. ( ச /பி )

(12) புவியோட்டில் சீயல் படை மீது சீமாப்படை அமைந்துள்ளது. ( ச /பி )

(13) குறுகிய காலத்தில் வளிமண்டலத்தில் நிலவுகின்ற பொதுவான நிலமை காலநிலை எனப்படும்.( ச /பி )


kalvi.lk

(14) வளி ஈர்ப்புச் சக்தி காரணமாக வளிமண்டலம் புவியுடன் இணைந்து காணப்படுகிறது. ( ச /பி )

(15) புவியின் உள்மையம் திரவ உலோகங்களினால் ஆனது. ( ச /பி )

**16 - 20 வரையான வினாக்களுக்கு 'அ' மற்றும் 'ஆ' எனும் இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றை இணைப்பதனூடாக வரும் சரியான விடையைத் தெரிந்து அடைப்பினுள் இடுக.**

(16) உலகின் முக்கியமான சில ஏரிகள் 'அ' எனும் நிரலிலும் இவை அமைந்துள்ள கண்டங்கள் 'ஆ' எனும் நிரலிலும் தரப்பட்டுள்ளன. இவற்றை சரியாக இணைப்பதனூடாகப் பெறப்படும் விடையினைத் தெரிந்து அடைப்பினுள் இடுக.

| அ | ஆ |
|---|---|
| 1. ஈரி ஏரி | A. ஆபிரிக்கா கண்டம் |
| 2. அயர் ஏரி | B. வட அமெரிக்கா கண்டம் |
| 3. தித்திக்கா ஏரி | C. அவுஸ்திரேலியா கண்டம் |
| 4. விக்டோரியா ஏரி | D. தென் அமெரிக்கா கண்டம் |

(1) C D B A (2) B C D A (3) C B D A (4) B C A D (............)

(17) வளிமண்டலத்தின் முக்கியமாக படைகள் 'அ' எனும் நிரலிலும் அவற்றின் சிறப்பம்சங்கள் 'ஆ' எனும் நிரலிலும் தரப்பட்டுள்ளன. இவற்றை சரியாக இணைப்பதனூடாக வரும் விடையைத் தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. மாறன் மண்டலம் | A. ஓசோன் படை அமைந்துள்ளது. |
| 2. படை மண்டலம் | B. அதிக வெப்பத்தைக் கொண்டுள்ளது. |
| 3. இடை மண்டலம் | C. வளி மண்டலத் தோற்றப்பாடுகள் உருவாகும். |
| 4. வெப்ப மண்டலம் | D. நீராவி, முகில்கள் இல்லை. |

(1) C A B D (2) B C A D (3) A D C B (4) C A D B (............)

(18) உலகின் முக்கியமான சில நதிகள் 'அ' எனும் நிரலிலும் அவை உற்பத்தியாகும் விதம் 'ஆ' எனும் நிரலிலும் தரப்பட்டுள்ளன. இவற்றை சரியாக இணைப்பதனூடாக வரும் விடையைத் தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. நைல் நதி | A. ஏரி மூலம் |
| 2. ரைன் நதி | B. ஊற்றிலிருந்து |
| 3. தேம்ஸ் நதி | C. மலைப்பகுதி ஊற்றிலிருந்து |
| 4. மகாவலி கங்கை | D. உருகிய பனியிலிருந்து |

(1) A D B C (2) C A B D (3) B A D C (4) C D B A (............)

(19) உலகின் முக்கியமான சில சமுத்திரங்கள் 'அ' எனும் நிரலிலும் அவற்றில் அமைந்துள்ள கடல்கள் 'ஆ' எனும் நிரலிலும் தரப்பட்டுள்ளன. இவற்றை சரியாக இணைப்பதனூடாக வரும் விடையைத் தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. பசுபிக் சமுத்திரம் | A. கார கடல் |
| 2. இந்து சமுத்திரம் | B. கரிபியன் கடல் |
| 3. அத்திலாந்திக் சமுத்திரம் | C. ஜப்பான் கடல் |
| 4. ஆட்டிக் சமுத்திரம் | D. அரேபியன் கடல் |

(1) A C D B (2) C B D A (3) C D B A (4) B C A D (............)



kalvi.lk

(20) உலகின் முக்கியமான சில மலைத்தொடர்கள் ‘அ’ எனும் நிரலிலும் இவை அமைந்துள்ள கண்டங்கள் ‘ஆ’ எனும் நிரலிலும் தரப்பட்டுள்ளன. இவற்றை சரியாக இணைப்பதனூடாக வரும் விடையைத் தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. அந்தீஸ் மலைத்தொடர் | A. அவுஸ்திரேலியாக் கண்டம். |
| 2. அல்ப்ஸ் மலைத்தொடர் | B. ஆபிரிக்காக் கண்டம். |
| 3. அட்லஸ் மலைத்தொடர் | C. ஐரோப்பாக் கண்டம். |
| 4. பெரிய பிரிப்பு மலைத்தொடர் | D. தென் அமெரிக்காக் கண்டம். |

(1) D A B C (2) B D C A (3) D C B A (4) A C B D (............)

**21 - 25 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உலகப் படத்தைப் பயன்படுத்தி விடை எழுதுக.**




(21) யுரேசியன் எனும் புவித்தகடு அமைந்துள்ள இடத்தைக் குறிப்பிடும் எழுத்து ............... ஆகும்.

(22) ஆபிரிக்கத் தகடு அமைந்துள்ள இடத்தைக் குறிப்பிடும் எழுத்து .............. ஆகும்.

(23) சமுத்திரத் தகடொன்றைக் குறிப்பிடும் எழுத்து ............ ஆகும்.

(24) சிறிய புவித்தகடான கோகோஸ் தகடு அமைந்துள்ள இடத்தைக் குறிப்பிடும் எழுத்து .............. ஆகும்.

(25) இலங்கை அமைந்துள்ள புவித்தகட்டு வலயம் ............ எனும் எழுத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**26 - 30 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடைகளை எழுதிப் பூரணப்படுத்துக.**

(26) நிலத்தில் காணப்படும் இறக்கங்களில் நன்னீர் நிறைந்து காணப்படும்போது, அவை .................... எனப்படும்.

(27) நிலமேற்பரப்பு மற்றும் நீர் நிலைகளில் உள்ள நீர் ......................... காரணமாக வளிமண்டலத்தைச் சென்றடைகின்றது.

(28) சமுத்திர நீர்ப்பரப்பிலிருந்து உயர்ச்சி அடைந்துள்ள பாரிய நிலத்திணிவுகள் ........................... எனப்படும்.

(29) புவியின் ஓடு மற்றும் மேல் மூடியினை உள்ளடக்கிய வலயம் ........................... எனப்படும்.

(30) வெப்பநிலையானது கடல் மட்டத்திலிருந்து மேலே செல்லும் ஒவ்வொரு 1000 மீற்றருக்கும் $6.4^0C$ வெப்பநிலை வீழ்ச்சியடையும் வளிமண்டலப்படை .............................. ஆகும்.


kalvi.lk

**31 - 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளில் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் இடுக.**

(31) புவியின் நீர்ப்பரம்பலுக்கு அமைய சமுத்திரம் மற்றும் கடல்களில் காணப்படும் நீரின் அளவு யாது?
(1) 25 % (2) 79 %
(3) 97.5 % (4) 29 % (............)

(32) புவியின் நீர்ப்பரம்பலில் மேற்பரப்பு நீர் அதிகமாகக் காணக்கூடிய இடம் பின்வருவனவற்றுள் எது?
(1) நதி (2) மண்ணீர்
(3) ஏரி (4) வளிமண்டல நீராவி (............)

(33) உயிர்க் கோளத்தின் செயன்முறைகளைப் பாதிக்கின்ற உயிரற்ற கூறு எது?
(1) தாவரங்கள் (2) மண்
(3) விலங்குகள் (4) பிரிகையாக்கிகள் (............)

(34) வளிக்கோளத்தில் அதிகளவாகக் காணப்படும் வாயு எது?
(1) நைதரசன் (2) ஒட்சிசன்
(3) ஆகன் (4) ஐதரசன் (............)

(35) புவியின் அமைப்புக்கு ஏற்ப தடிப்பான உலோகப்படையைக் கொண்டது எது?
(1) கீழ்மூடி (2) மேல்மூடி
(3) வெளிமையம் (4) உள்மையம் (............)

(36) கண்டங்களின் பருமன் தொடர்பாக இறங்குவரிசைப்படுத்தினால் பெறப்படும் சரியான விடை யாது?
(1) ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பா (2) ஆபிரிக்கா, ஆசியா, அவுஸ்திரேலியா
(3) ஆசியா, ஆபிரிக்கா, வடஅமெரிக்கா (4) ஆசியா, ஆபிரிக்கா, தென்அமெரிக்கா (............)

(37) ஆசியாக் கண்டமேடையில் அமைந்துள்ள தீவுகளில் ஒன்று
(1) யப்பான் (2) தஸ்மேனியா
(3) போர்ணியோ (4) பப்புவா நியுகினியா (............)

(38) இலங்கையில் அமைந்துள்ள மேட்டு நிலங்களுள் ஒன்று அல்லாதது பின்வருவனவற்றுள் எது?
(1) ஹட்டன் மேட்டுநிலம் (2) வெளிமடை மேட்டுநிலம்
(3) கொஸ்லாந்தை மேட்டுநிலம் (4) ஹபுத்தலை மேட்டுநிலம் (............)

(39) பின்வரும் சமவெளிகளுள் அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ள சமவெளி யாது?
(1) சைபீரியன் சமவெளி (2) துல்லாபார் சமவெளி
(3) மஞ்சூரியன் சமவெளி (4) ஹோட்டன் சமவெளி (............)

(40) முனைவுக் காலநிலை நிலவும் பிரதேசத்தில் காணப்படும் வருடாந்த மழைவீழ்ச்சி யாது?
(1) 250 mm - 300 mm (2) 500 mm - 1000 mm
(3) 1250 mm - 2000 mm (4) 2000 mm - 5460 mm (............)


kalvi.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

61 T I


# முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020
# First Term Test - Grade 10 - 2020

## புவியியல் - II

இவ் வினாபத்திரம் I, II என இரு பகுதிகளைக் கொண்டது.
பகுதி I இன் 1ம் வினா கட்டாயமானது. அதில் அ, ஆ, இ ஆகிய மூன்று பகுதிகளுக்கும் விடையளிக்க வேண்டும்.
பகுதி II 4 வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க வேண்டும். மொத்தமாக 5 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

## பகுதி - I


(01) (அ) 1 : 50, 000 இடவிளக்கப் படத்தின் மாதிரி உருவைப் பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




(i) A, B எனும் எழுத்துக்களால் குறிப்பிடப்படும் எல்லைக் கோடுகளின் பெயர்களை ஒழுங்குமுறையாகத் தருக.
(ii) C எனும் எழுத்தால் குறிப்பிடும் பிரதேசம் யாது?
(iii) A எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள பிரதேசத்தில் காணப்படும் இரண்டு தகவல்களை எழுதுக.
(iv) இல. 1, 2 இனால் குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் உள்ள தகவல்களை ஒழுங்கு முறையாகத் தருக.
(v) 1 : 50, 000 இடவிளக்கப் படத்தின் மூன்று திசைகளையும் குறிப்பிடுக.

(2 x 5 = 10 புள்ளிகள்)

(ஆ) உமக்கு வழங்கப்பட்டுள்ள பின்வரும் உலகப் படத்தினை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.



(i) படத்தில் A, B, C எனும் எழுத்துக்களால் அடையாளமிடப்பட்டுள்ள மலைத்தொடர்களுள் ரொக்கி மலைத்தொடரைக் குறிப்பிடும் எழுத்து யாது?

(ii) படத்தில் D, E, F எனும் எழுத்துக்களால் அடையாளமிடப்பட்டுள்ள ஏரிகளுள் பைக்கால் ஏரியைக் குறிப்பிடும் எழுத்து யாது?


(iii) படத்தில் G, H, I எனும் எழுத்துக்களால் அடையாளமிடப்பட்டுள்ள நதிகளுள் நைல் நதியைக் குறிப்பிடும் எழுத்து யாது?

(iv) படத்தில் J, K, L எனும் எழுத்துக்களால் அடையாளமிடப்பட்டுள்ளவற்றுள் மஞ்சள் கடலைக் குறிப்பிடும் எழுத்து யாது?

(v) படத்தில் M, N, O எனும் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ள தீவுகளுள் பிரித்தானியத் தீவைக் குறிப்பிடும் எழுத்து யாது?

(1 x 5 = 5 புள்ளிகள்)

(இ) உமக்கு வழங்கப்பட்டுள்ள பின்வரும் இலங்கைப் படத்தினை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.




(i) படத்தில் A,B,C எனும் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் லுணுவில தென்னை ஆராய்ச்சி நிலையத்தைக் குறிப்பிடும் எழுத்து யாது?

(ii) படத்தில் D,E,F எனும் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் கொட்டியாரக்குடாவைக் குறிப்பிடும் எழுத்து யாது?

(iii) படத்தில் G,H,I எனும் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் வளவை கங்கையைக் குறிப்பிடும் எழுத்து யாது?


(iv) படத்தில் J,K,L எனும் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் அதிக சனத்தொகையைக் கொண்டுள்ள கம்பஹா மாவட்டத்தைக் குறிப்பிடும் எழுத்து யாது?

(v) படத்தில் P,Q,R எனும் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் மாகம்புர துறைமுகத்தைக் குறிப்பிடும் எழுத்து யாது?

(1 x 5 = 5 புள்ளிகள்)

## பகுதி - II

(02) கற்கோளத்தின் அமைப்பு பற்றிய பின்வரும் உருவை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.





kalvi.lk

(i) இவ்வுருவில் 1, 2 இலக்கங்களினால் குறிக்கப்பட்டுள்ள பகுதிகளை இனங்கண்டு ஒழுங்குமுறையாகப் பெயரிடுக. (2 புள்ளி.)

(ii) (a) மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு பகுதிகளும் எப்பாறைகளால் உருவாக்கப்பட்டுள்ளன என்பதனை ஒழுங்குமுறையாகக் குறிப்பிடுக. (2 புள்ளி.)

(b) கற்கோளத்திற்குரிய இலக்கம் 03 இனால் குறிப்பிட்டுள்ள படையைப் பெயரிடுக. (1 புள்ளி)

(c) இலக்கம் 04 இனால் குறிப்பிட்டுள்ள தொடர்ச்சியின்மையைப் பெயரிடுக. (1 புள்ளி)

(iii) கற்கோளத்தில் காணப்படும் வளங்களை மனித நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் போது கற்கோளத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (4 புள்ளி.)

(03) (i) உயிர்க்கோளத்தின் இடைத்தொடர்புச் செயன்முறைகளைக் கொண்டு நடத்தும் உப படைகள் மூன்றினைப் பெயரிடுக.

(ii) இப்படைகள் மூன்றினதும் உயிர்க்கோளத்தின் எல்லைகளை ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.


(iii) உயிர்க்கோளத்தின் நிலைப்பாட்டிற்கு மனித நடவடிக்கைகளால் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அதில் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

( 3 + 3 + 4 = 10 புள்ளிகள் )

(04) அனைத்து உயிர்த்தொகுதிகளின் வளர்ச்சிக்கும் நீர் இன்றியமையாதது.

(i) புவியின் நீர்கோளத்தில் காணப்படுகின்ற நீரின் வடிவங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(ii) பின்வரும் நீரியல் வட்ட மாதிரி உருவினைப் பயன்படுத்தி A, B, C எனும் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளுக்கு முறையே பெயரிட்டு, அவற்றை சுருக்கமாக விளக்குக.




(iii) தற்காலத்தில் நீரின் தரக்குறைவுக்குச் செல்வாக்குச் செலுத்தும் மனித நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு, அதில் ஒன்றை சுருக்கமாக விளக்குக.

( 2 + 3 + 5 = 10 புள்ளிகள் )

(05) உலகிலுள்ள சமவெளிகள் உருவாக்க முறையின் அடிப்படையிலும் இடவமைவு அடிப்படையிலும் அமையப் பெற்றுள்ளன.

(i) ரஷ்யாவிலும் அவுஸ்திரேலியாவிலும் அமைந்துள்ள சமவெளிகளை முறையே குறிப்பிடுக.

(ii) உருவாக்க முறையின் அடிப்படையில் தோற்றம் பெற்ற விசேட சமவெளிகள் மூன்றினைக் குறிப்பிடுக.



kalvi.lk

(iii) (a) மலைப் பிரதேசங்களில் மானிட நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமைக்கான காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(b) சமவெளிப் பிரதேசங்கள் மானிட நடவடிக்கைகளுக்குச் சாதகமாகக் காணப்படுவதற்கு ஏதுவான காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக.

( 2 + 3 + 2 + 3 = 10 புள்ளிகள் )

(06) உலகின் பிரதான காலநிலை வலயங்கள் அமையப்பெற்ற மாதிரியுரு பின்வருமாறு. இதனை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.




(i) இவ்வுருவில் A, B எனும் எழுத்துக்களால் அடையாளம் இடப்பட்ட காலநிலை வலயங்கள் இரண்டினையும் முறையே பெயரிடுக.

(ii) (a) இங்கு A எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள காலநிலை வலயம் அமைவு பெற்றுள்ள அகலக் கோடுகளைக் குறிப்பிடுக.


(b) B, C எனும் வலயங்களில் காணப்படும் சிறப்பான காலநிலை வகைகளை ஒழுங்குமுறையாகக் குறிப்பிடுக.

(iii) காலநிலை வலயங்களில் காணப்படும் விசேட காலநிலை அம்சங்கள் சில பின்வருமாறு. இவற்றுள் A எனும் எழுத்தால் குறிப்பிடப்பட்டுள்ள காலநிலை வலயத்தின் விசேட அம்சங்கள் மூன்றினையும் B எனும் எழுத்தால் குறிப்பிடப்பட்டுள்ள காலநிலை வலயத்தின் விசேட அம்சங்கள் இரண்டினையும் தெரிவு செய்து எழுதுக.

தெளிவான வெப்பப் பருவம் காணப்படும்.
வருடம் பூராகவும் மிக உயர்ந்த வெப்பநிலை காணப்படல்.
குளிர் பருவத்தினை அவதானிக்க முடியும்.
அதிக பிரதேசங்களுக்கு வருடம் பூராகவும் மிக உயர்ந்த மழைவீழ்ச்சியைக் கொண்டிருத்தல்.
மூடுபனியும் மழைப்பனி வீழ்ச்சியும் ஏற்படும்.
மழைவீழ்ச்சியில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படும்.

( 2 + 3 + 5 = 10 புள்ளிகள் )

(07) கடல் படுக்கையின் பல்வேறு அம்சங்களைக் கொண்ட மாதிரி உரு பின்வருமாறு தரப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.




(i) கண்டமேடை என்றால் என்ன என்பது பற்றி சுருக்கமாக விளக்குக.

(ii) உருவில் 1, 2, 3 இனால் குறிப்பிட்டுள்ள நிலத் தோற்றங்களைப் பெயரிடுக.

(iii) (a) மிக ஆழமான சமுத்திர அகழி யாது?

(b) மனிதன் சமுத்திரப் பிரதேசங்களைப் பயன்படுத்தும் இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(c) சமுத்திர நீர் மாசடையும் மனித செயற்பாடுகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

( 2 + 3 + 5 = 10 புள்ளிகள் )


kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page